# நன்றித் திருப்பலி

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே!

நல்லது எல்லாமே அவராலேயே!

நன்மைகளின் நாயகரும் அவரே!

நன்றி! நன்றி!! என்று வாயாரச் சொல்லிப் புகழ்வோம்.

ஐயன் வள்ளுவன் சொன்னார்: "நன்றி மறப்பது நன்றன்று" என்று. நன்றி கூற மறந்தவர்களை தேடினார் இறைமகன். அவர்கள் ஒன்பது பேரும் குணம் பெறவில்லையா? என்று கேட்டு.

இரு குடும்பங்களில் இறைவன் செய்த நன்மையாலே இருமணங்கள் இணைந்தது; இல்லற வாழ்வு தொடங்கியது. இணைந்தே இறைவனுக்கு நன்றி சொல்ல முன்வருவோம்.

நன்றி நிறைந்த மனம் இறைவன் அருளிய நல்ல மனமே. அந்த மனத்தின் வெளிப்பாடாக படைத்தவருக்கு நன்றி சொல்லி, அவரையே வாழ்த்திப் பாராட்டி, வணங்கிச் செல்ல முன்வருவோம்.

தந்தைக்கு அவர் செலுத்திய நன்றிப்பலியே கல்வாரிப்பலி. நாம் நம் நன்றியை வெளிப்படுத்திட "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று அவர் நமக்கு தந்த கொடையே இக்கல்வாரி வழிபாடு.

ஒருங்கிணைந்து மகிழ்வுடனே நன்றிப்பலி செலுத்தி, நன்மையின் நல்லவரை வாழ்த்தி வணங்குவோம்! வாரீர்!!

**இறைமக்களின் மன்றாட்டுகள்**

1. என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா!

நாங்கள் சார்ந்த எங்களது திரு அவையை வழிநட த்தும் யாவரையும் உம் அரவணைப்பில் ஏற்று ஆசீர்வதித்து காத்தருள

இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா!

எம் நாட்டையும், நாட்டை ஆள்வோரையும், எம் நாட்டு மக்களையும் உம்முடைய மேலான இறைப்பாதுகாப்பில் எந்நாளும் பாதுகாத்து, நிறைவளங்களால் என்று வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா!

உமது சந்நிதானத்தில் நன்றி நிறைந்த இதயத்தோடு வந்துள்ள திரு. --------- - திருமதி. ------------ தம்பதியரை உம் அருளாலும் இரக்கத்தாலும் வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா!

உறவிலே இணைந்திருக்கின்ற இரு குடும்ப உறுப்பினர்களையும் உம் அருளால் காத்து வழிநடத்தி மன ஒற்றுமையோடு பயணிக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா!

நன்றி கூறும் நல் இதயத்தை ஆசீர்வதிக்கும் நல் தெய்வமே , உம் சந்நிதானத்தில் பலி ஒப்புக்கொடுத்து செபிக்கும் உறவுகளாய் ஒன்றிணைந்து இருக்கும் எங்கள் யாவருக்கும் பரிபூரண நலன் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

6. என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா!

எங்களது உறவுகளிலே, எங்களது நினைவில் வாழும் யாவருக்கும், நித்திய அமைதியிலே இடம் தந்து, உம்மை தரிசிக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திருவிருந்துக்குப் பின் தம்பதியராக இணைந்து சொல்ல வேண்டிய செபம்

“எங்கள் மூதாதையரின் இறைவா, போற்றி!

உமது பெயர் என்றென்றும்

எல்லாத் தலைமுறைகளுக்கும் போற்றி!

வானங்களும் உம் படைப்பு அனைத்தும்

எக்காலமும் உம்மைப் போற்றுக!

நீர் ஆதாமைப் படைத்தீர்;

அவருடைய மனைவி ஏவாளை அவருக்குத்

துணையாகவும் ஆதரவாகவும் உண்டாக்கினீர்.

அவர்கள் இருவரிடமிருந்தும் மனித இனம் தோன்றியது.

‘மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று;

அவனுக்குத் தகுந்ததொரு துணையை

உருவாக்குவோம்’ என்று உரைத்தீர்.✠

இப்பொழுது இவர்களை

நான் வாழ்க்கைத் துணைவராக /

வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்வது

இச்சையின் பொருட்டன்று,

நேர்மையான நோக்கத்தோடுதான்.

எங்கள்மீது இரக்கம் காட்டும்;

நாங்கள் இருவரும் முதுமை அடையும்வரை

இணைபிரியாது வாழச் செய்யும்.” “ஆமென், ஆமென்”